(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.275/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.3 (LW.3) (Through V.C)

| | | |
|---|---|---|
| Name | : | நந்தகுமார் |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 40 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **13.07.2026.**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2025ம் தேதி 16.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவலில் சம்பந்தமாக திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நானும், போலீஸ் பார்டி த.கா சபரிசன் மற்றும் ஆனந்தன் ஆகியோர்களுடன் திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகம் சக்திநாயக்கன்பாளையம் அருகே உள்ள பனஞ்சாரியில் கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் ஒரு சிறிய பிளாஷ்டிக் குடத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு அல்லக்கயிறுடன் பனமரத்திலிருந்து இறங்கியவரை சுற்றி வளைத்து பிடித்து அவரை விசாரிக்க அவர் தன் பெயர் செந்தில் என்றும் அரசு அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பான பனமரத்திலிருந்து பனங்கள்ளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி சோதனை செய்தபோது பிளாஷ்டிக் குடத்தில் 2 லிட்டர் பனங்கள்

இருந்தது. அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 16.00 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி வழக்கு சொத்தை அதே இடத்தில் மணியளவில் கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 77/2025 ச/பி. 4(1)(C) TNP Amendement ACt–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் த.கா. சபரிசன் மற்றும் ஆனந்தன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.–**

நாங்கள் சம்பவ இடம் சென்றபோது எதிரி கள்ளை இறக்கி கொண்டுவந்து கொண்டிருந்தாரா என்றால் கள்ளை இறக்கிகொண்டு வந்துகொண்டிருந்தார். பிளாஸ்டிக் குடித்தில் சுமார் 2 லிட்டர் பனங்கள்ளை கொண்டுவந்தார். பிளாஸ்டிக் குடத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு பனமரத்திலிருந்து இறங்கிய போது எதிரியை கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை சுற்றி வளைத்து பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. பனைமரத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கு அரசு அனுமதி உள்ளது என்றால் சரிதான், பனங்கள் இறக்க தான் அனுமதி இல்லை என்றால் சரிதான். எதிரி இறக்கியது பதநீரா, பனங்கள்ளா என்று நாங்கள் ஆய்வு செய்தோமா என்றால் இல்லை ஆனால் புளித்தவாடை வரும். கைப்பற்றிய பொருளை அதே இடத்தில் அழித்துவிட்டோம் என்றால் சரிதான். கைப்பற்றிய பொருளில் மாதிரி எடுத்து ஆய்விற்கு அனுப்பினோமா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தோமா என்றால் தயார் செய்யவில்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தோமா என்றால் இல்லை. பிளாஷ்டிக் குடத்தை கைப்பற்றினோமா என்றால் இல்லை அதே இடத்தில் உடைத்துவிட்டோம். குடத்தை உடைத்தததாக அழித்தல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். கைப்பற்றிய பிளாஸ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை.

இவ்வழக்கில் நான் தான் புகார்தாராக இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்து, இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நானே புகாரை பெற்று விசாரணை அதிகாரியாக இருந்து இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெற வில்லை என்றால் சரியில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். அந்த இடத்தின் உரிமையாளரை நான் சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் மதுவிலக்கு சட்டப்பட்ட கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் அதை அழித்ததற்கான சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

**மறு விசாரணை** – இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.07.13 18:22:45 +0530